செ.வெ.எண்:46/ஜனவரி நாள்:29.01.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**
**வாக்காளர் பட்டியல் சிறப்பு தொடர் திருத்த சிறப்பு முகாம் வருகின்ற 31.01.2016 மற்றும் 06.02.2016 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது.**
**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்திரவின்படி, வாக்காளர் பட்டியல் சிறப்பு தொடர் திருத்தம் 20.01.2016 முதல் நடைபெறுவதை முன்னிட்டு, வாக்காளர் பட்டியலில் சேர்த்தல், நீக்கல், திருத்தம் செய்தல், மற்றும் ஒரே சட்ட மன்றத் தொகுதிக்குள் குடியிருப்பு மாறியவர்களை பாகம் விட்டு பாகம் மாறுதல் செய்தல் போன்றவற்றிற்கு அனைத்து வட்டாட்சியர் / உதவி வாக்காளர் பதிவு அலுவலகங்களிலும் விண்ணப்பங்கள்6,7,8, மற்றும் 8A பெறப்பபட்டு வருகிறது.

இச்சிறப்பு தொடர் திருத்தத்தின் ஒரு பகுதியாக எதிர்வரும் **31.01.2016 (ஞாயிற்றுக் கிழமை) மற்றும் 06.02.2016 (சனிக்கிழமை)ஆகிய தேதிகளில் அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் முற்பகல் 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை** நடைபெற உள்ளது. எனவே, 18 வயது நிறைவடைந்தும் இதுநாள் வரை வாக்காளர் பட்டியலில் இடம்பெறாதவர்களும் மற்றும் 01.01.2016 அன்று 18 வயது பூர்த்தி அடைந்தவர்களும், திருத்தம் செய்தல், நீக்கல் மற்றும் ஒரே சட்ட மன்றத் தொகுதிக்குள் குடியிருப்பு மாறியவர்களை பாகம் விட்டு பாகம் மாறுதல் செய்தல் போன்றவற்றிற்கு மேற்குறிப்பிட்ட நாட்களில் வாக்குச் சாவடி மையங்களுக்குச் சென்று வயது மற்றும் இருப்பிட முகவரிக்கான ஆதாரங்களின் நகல்களை அளித்து வாக்காளர்களாகத் தங்களைப் பதிவு செய்ய விண்ணப்பிக்கலாம். இந்திய தேர்தல் ஆணையத்தின் இணையதள முகவரியிலும் www.elections.tn.gov.in விண்ணப்பிக்கலாம். இவ் வாய்ப்பினை தவறாது பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறது.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**